# தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (டிட்டோஜாக்)

தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு டிட்டோஜேக் பேரமைப்பின் மாநில உயர்மட்டக்குழுக் கூட்டம் 29.01.2024 அன்று மாலை 05.30 மணிமுதல் 07.20 மணிமுடிய காணொளி வாயிலாக நடைபெற்றது.

டிட்டோஜேக் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினரும், தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச்செயலாளருமான திரு.**இரா.தாஸ்** அவர்கள் தலைமை ஏற்றார். காணொளிக் கூட்டத்தில் பங்கேற்ற மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் அனைவரின் கருத்துக்களின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

## தீர்மானம் - 1

டிட்டோஜேக் பேரமைப்பு சார்பில் தமிழகம் முழுவதும் வட்டாரத் தலைநகர்களில் 11.01.2024 அன்று எழுச்சிமிகு ஆர்ப்பாட்டமும், 27.01.2024 அன்று அனைத்து மாவட்டத் தலைநகர்களில் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் தன்னெழுச்சியாகப் பங்கேற்ற உண்ணாவிரதப் போராட்டமும் பள்ளிக்கல்வித்துறை அரசாணை எண் 243மீது ஆசிரியர்களிடத்தில் ஏற்படுத்தியுள்ள அதிருப்தியினையும், எதிர்ப்புணர்வினையும், தமிழக அரசுக்கும், பள்ளிக்கல்வித் துறைக்கும் உணர்த்தியுள்ளது.

23.01.2024 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மதிப்புமிகு பள்ளிக்கல்வி இயக்குநர், மதிப்புமிகு. தொடக்கக்கல்வி இயக்குநர் ஆகியோர் முன்னிலையில் டிட்டோஜேக் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அரசாணை 243 ஆசிரியர்கள் நாள் 21.12.2023 மத்தியில் கடும் அதிருப்தியினை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், ஆசிரியர்களின் 60 ஆண்டுகால ஒன்றிய முன்னுரிமை என்ற நடைமுறையினை எவ்வித ஆலோசனையும், கருத்துக் கேட்பும் இன்றி மாநில முன்னுரிமையாக மாற்றி இருப்பதை 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும், பதவி உயர்வு நடைமுறையில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களால் 90

சதவீத ஆசிரியர்களின் பதவி உயர்வு வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது என்பதையும், குறிப்பாக பெண் ஆசிரியர்களின் பதவி உயர்வு மாநில முன்னுரிமையால் பாதிக்கப்படும் என்பதையும் எடுத்துரைத்தோம்.

பரிசீலனை செய்வதாக அளித்த உறுதியினை விரைந்து செயல்படுத்திட வேண்டுமெனவும், அரசாணை எண் 243ஐ உடன் இரத்து செய்திட வேண்டுமெனவும், மாண்புமிகு. பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களை டிட்டோஜேக் பேரமைப்பு பெரிதும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

## தீர்மானம் - 2

90 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மத்தியில் கொந்தளிப்பினை ஏற்படுத்தியுள்ள அரசாணை 243ஐ இரத்து செய்ய வலியுறுத்தி தமிழகம் முழுவதும் தொடர் போராட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில், அந்த அரசாணையை வரவேற்று ஒருசிலர் மாநாட்டினை நடத்துவதும், அதில் மாண்புமிகு. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் பங்கேற்பதும், ஆசிரியர்கள் மத்தியில் அரசின்மீது மேலும் அதிருப்தியினை அதிகரிக்கச் செய்யும் என்பதையும், இதுபோன்ற மாநாடுகளில் பங்கேற்பதைத் தவிர்க்க வேண்டுமெனவும் மாண்புமிகு. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களை டிட்டோஜேக் பேரமைப்பு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

## தீர்மானம் - 3

தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் 1 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் உணர்வினைப் புறந்தள்ளிவிட்டு அரசாணை 243ஐ வரவேற்கும் நன்றி அறிவிப்பு மாநாடுகளில் மாண்புமிகு. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பங்கேற்றால், ஆசிரியர்களின் மன உணர்வினை வெளிப்படுத்தும் வகையில் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகர்களில் 04.02.2024 அன்று ஆர்ப்பாட்டம் நடத்துவது என ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 4

ஜாக்டோ ஜியோ பேரமைப்பு அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் முன்னணியில் நின்று களத்தில் போராடி போராட்டத்திற்கு வலிமை சேர்ப்பது தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களே என்பதையும், ஜாக்டோ ஜியோ

பேரமைப்பின் போராட்டங்களில் பங்கேற்போரில் 4இல் 3 பங்கு தொடக்கக்கல்வி ஆசிரியர்களே என்பதையும் அனைவரும் அறிவார்கள். தற்போது பள்ளிக்கல்வித்துறை அரசாணை 243ஐ வெளியிட்டு 60 ஆண்டுகால நடைமுறையினை மாற்றி அமைத்து, தொடக்கக்கல்வித் துறையில் பணிபுரியும் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசாணை 243ஐ இரத்து செய்ய வலியுறுத்தி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டுநடவடிக்கைக்குழுவான டிட்டோஜேக் பேரமைப்பு தொடர் போராட்டங்களை அறிவித்து நடத்தி வருகிறது.

அரசாணை 243ஐ பள்ளிக்கல்வித்துறை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினை ஜாக்டோ ஜியோவின் கோரிக்கைகளில் இணைக்க வேண்டுமென ஜாக்டோ ஜியோ பேரமைப்பினை பெரிதும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.

## தீர்மானம் - 5

ஆட்சி அமைந்து 30 மாத காலமாகியும், ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் ஒரு கோரிக்கையைக்கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றாத நிலையில், நம்முடைய வாழ்வாதாரமான கோரிக்கைகளான CPS திட்டம் இரத்து, இடைநிலை ஆசிரியர் ஊதிய முரண்பாடு களைந்து 1.1.2006 முதல் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்குதல், ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு தடை நீக்குதல், உயர்கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு பழைய நடைமுறைப்படி தொடர வேண்டுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ஜாக்டோ ஜியோ பேரமைப்பு உச்சகட்டமான காலவரையற்ற வேலைநிறுத்தம், தொடர் மறியல் போராட்டங்களை அறிவித்து நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் இப்பேரமைப்பில் உள்ள ஒரு சில சங்கங்கள் தமிழக அரசுக்கு நன்றி அறிவிப்பு மாநாட்டினை நடத்துவது நம்முடைய போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கையாகவே டிட்டோஜேக் பேரமைப்பு கருதுகிறது.

இதுபோன்ற சங்கங்களை இனம்கண்டு ஜாக்டோ ஜியோ பேரமைப்பில் இருந்து விலக்கி வைக்க வேண்டும் என்பதே ஆசிரியர்கள் அனைவரின் உணர்வாக உள்ளது என்பதை ஜாக்டோ ஜியோ பேரமைப்புக்கு தெரிவித்துக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 6

அரசாணை 243ஐ இரத்து செய்வது உள்ளிட்ட நமது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி அடுத்தகட்டப் போராட்டமான 19.02.2024 முதல் 21.02.2024 முடிய தொடர் மறியல் போராட்டத்தினை எழுச்சியுடன் நடத்திட திட்டமிடுவதற்காக 11.02.2024 அன்று தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் போராட்ட ஆயத்த மாநாடுகளை நடத்துவது எனவும், மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் அம்மாநாடுகளில் பங்கேற்பது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

## தீர்மானம் - 7

தொடக்கக்கல்வித்துறையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கடும் பாதிப்பினை ஏற்படுத்தும் அரசாணை 243ஐ இரத்து செய்ய தமிழக அரசை வலியுறுத்திட வேண்டி அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் சந்திப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ந.ரங்கராஜன்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

4.1.2024
(செ.முத்துச்சாமி, Ex. MLC)
பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

(அ.வின்சென்ட்பால்ராஜ்)
பொதுச்செயலாளர்,
தமிழக ஆசிரியர் கூட்டணி

04/01/2024
(ச.மயில்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

4.1/24
(இரா.தாஸ்)
பொதுச்செயலாளர்,
தமிழக ஆரம்பபள்ளி
ஆசிரியர் கூட்டணி

(சி.சேகர்)
பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி
பட்டதாரி ஆசிரியர் சங்கம்

4/1/24
(இல.தியோடர் ராபின்சன்)
பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் மன்றம்

4.1.24
(நா.சண்முகநாதன்)
பொதுச்செயலாளர்,
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் மன்றம்

4.1.2024
(வி.எஸ்.முத்துராமசாமி)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

(கோ.காமராஜ்)
பொதுச்செயலாளர்
தமிழக தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

(சி.ஜெகநாதன்)
பொதுச்செயலாளர்,
JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி
ஆசிரியர் கூட்டணி

(டி.ஆர்.ஜான் வெஸ்லி)
பொதுச்செயலாளர்,
தமிழக ஆரம்பப்பள்ளி
ஆசிரியர் சங்கம்